நாட்டுப்புறப் பாடல் வகைகள்

டாக்டர் ஆறு. இராமநாதன்

நாட்டுப்புறப் பாடல் வகைகள்

டாக்டர் ஆறு. இராமநாதன்

புலமை வெளியீடு

38-இ, பீமண்ண முதலி தோட்டத் தெரு
ஆழ்வார்பேட்டை, சென்னை-600 018

புலமை, ஜூன் 1982

நாட்டுப்புற பாடல்வகைகள்
(Classification of Folk-Songs)

விலை: ரூ 2.50

கிடைக்குமிடங்கள் :

1. புலமை, 38-இ, பீமண்ண முதலி தோட்டத்தெரு,
சென்னை - 600 018.
2. சமுதாயச்சிற்பிகள் வெளியீட்டகம்
மஞ்சக்கொல்லை—அஞ்சல்
புவனகிரி - 608601
3. பாரி நிலையம், 59. பிராட்வே, சென்னை-1.

நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-14

முன்னுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலிருந்து, 'தென்னார்க்காடு மாவட்ட நாட்டுப்புறப்பாடல்கள்' என்ற தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழக டாக்டர் பட்டத்திற்காகக் கொடுக்கப்பட்ட (பிப்ரவரி, 1980) ஆய்வேட்டின் ஒரு கட்டுரையே இச்சிறுநூல்.

ஆய்விற்காக மக்களிடமிருந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடல்கள் சேகரிக்கப்பட்டன. அவற்றை வகைப்படுத்த முனைந்தபோது ஏற்பட்ட சிக்கல்களும் அதனைத் தொடர்ந்து தோன்றிய சிந்தனையும் இக்கட்டுரை உருவாகக் காரணங்களாகும். இக் கட்டுரையின் அடிப்படையிலேயே நான் சேகரித்த பாடல்கள் வகைப்படுத்தப்பட்டன.

தமிழ் நாட்டுப் புறவியல் துறை ஆய்வில் இளம் ஆய்வாளர்கள் பலர் ஆர்வத்தோடு ஈடுபடுவதைக் காண முடிகிறது. அவர்கள் சேகரிக்கும் பாடல்களை வகைப்படுத்துவதற்கு சூழலை அடிப் படையாகக் கொண்ட இந்த வகைப்பாடு துணை புரியும். அல்லது இதனினும் சிறந்த வகைப்பாடு ஒன்றை அவர்கள் உருவாக்கிக் கொள்வதற்கும் இவ்வகைப்பாடு துணை புரியலாம். என்னுடைய டாக்டர் பட்ட ஆய்வேடு 'நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல்' என்ற பெயரில் மணிவாசகர் நூலகத்தாரால் ஏப்ரல் 1982ல் வெளியிடப்பட்டது. பொருள் பொருத்தமின்மை கருத இக்கட்டுரை அந்நூலில் சேர்க்கப்படாமல் இங்குத் தனியாக வெளியிடப்படுகிறது.

ஆய்வுக்காலத்தில் (பிப்ரவரி 1976-80) பல்வேறு நிலைகளில் என்னுடைய ஆய்விற்குத் துணை புரிந்த மதிப்பிற்குரிய இயக்குநர் பேராசிரியர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்களுக்கும் என்னுடைய மேற்பார்வையாளர் அன்புக்குரிய டாக்டர் ஏ. என். பெருமாள் அவர்களுக்கும் இதய பூர்வமான நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

ஆய்வுக் காலத்தில் ஆய்வு குறித்துப் பல்வேறு ஆலோசனைகளை நல்கிய டாக்டர் பொற்கோ அவர்கள் இக்கட்டுரை பல்கலை ஆய்வு ஏடான புலமை (சூன் 1982)யில் வெளி வரவும் உதவியுள்ளார். அத்துடன் இது தனி நூலாகவும் வெளிவருகிறது. அவருக்கு என் அன்பான நனறியைக் கூறிக் கொள்கின்றேன்.

என்னுடைய ஆய்வேட்டை வெளியிடுவதற்கு அனுமதியளித்த சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும் என் நன்றி உரியது. ஆய்வு பற்றிய கருத்துரைகள் வரவேற்கப்படுகின்றன.

சென்னை

2. 8. 82

அன்புடன்

ஆறு. இராமநாதன்

பொருளடக்கம்

நாட்டுப்புறப் பாடல் வகைகள்

0. "ஒரே மாதிரியாக இருப்பவற்றை இனங்கண்டு ஒன்றாக் குதலே வகைப்படுத்தல்"[1] எனப்படும். "நேரின மணியை நிரல் பட வைத்தாங்கு, ஒரினப் பொருளை ஒரு புடை வைப்பது"[2] என்ற ஓத்தின் இலக்கணத்தை வகைப்படுத்தலின் இலக்கணமாகக் கொள்ளலாம். சரியான வகைப்பாடு இல்லையென்றால் எந்த ஒரு துறையும் அல்லது ஆய்வும் சிறப்புற இயலாது. வகைப்படுத்தல் எவ்வளவுக்கெவ்வளவு நுணுக்கமாகவும் செம்மையாகவும் அமை கிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஆய்வுகள் நுணுக்கமாக அமையும்.

தமிழகத்தில் வளர்ந்து வரும் நாட்டுப்புற இயல் துறைக்கு நுணுக்கமான வகைப்பாடு மிக மிக இன்றியமையாத ஒன்று நாட்டுப்புற இயலின் ஒரு பிரிவான நாட்டுப்புற இலக்கியங்களை மொழிநடை (Texture), பாடம் (Text), வழங்கப்படும் சூழல் (Context) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பாடல்கள் (Songs), கதைகள் (Tales), பழமொழிகள் (Proverbs), புதிர்கள் (Riddles) என்று நான்கு வகையாகப் பிரிப்பர். இவற்றுள் தமிழக நாட்டுப்புறப் பாடல்களை வகைப்படுத்த முயல்வதே இக்கட்டுரை யின் நோக்கமாகும்.

1 வகைப்படுத்தும் முயற்சி

நாட்டுப்புறப் பாடல்களை வகைப்படுத்தும் முயற்சியில் இத் துறையில் ஈடுபாடு கொண்ட தமிழறிஞர்கள் பலர் பங்கேற்றுள்ள னர் (அட்டவணை காண்க). வகைப்படுத்தும் முயற்சிகளைத் தொடக்க காலத்திலிருந்து இன்று வரை வரலாற்று அடிப்படை யில் பாடல்களை உதிரியாகப் பெயர்சுட்டிய நிலை, பல்வேறு அளவு கோல்களை வைத்து வகைப்படுத்திய நிலை, ஒரே அளவு கோலை வைத்து வகைப்படுத்திய நிலை என்று மூன்று பிரிவு களாகப் பிரித்துக் கொள்ளலாம். இந்த முப்பிரிவுகளையும் பற்றிய தெளிவான கண்ணோட்டம் புதிய வகைப் பாட்டுக்கான தேவையை உணர்த்தும்,

1.1. பாடல்களை உதிரியாகப்பெயர் சுட்டியநிலை

தமிழக நாட்டுப் புறப்பாடல்களைத் தொகுத்து வெளியிடத் தொடங்கிய தொடக்க காலத்தை இப்பிரிவில் அடக்கலாம். முதல் தொகுப்பினை வெளியிட்ட திரு.மு. அருணாசலம் அவர்கள் பாடல்களை ஏற்றப்பாட்டு, வள்ளைப்பாட்டு, விடுகதைப் பாட்டு முதலிய பன்னிரெண்டு பெயர்களில் உதிரியாகப் பெயர் சுட்டுகின்றார்[3]. பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்களும் பாடல்களை நீதி நெறிப் பாடல்கள், தத்துவப் பாடல்கள், பழமொழிப் பாடல்கள், தொழில்வகைப் பாடல்கள், வேளாண்மைப் பாடல்கள் முதலான பத்தொன்பது பிரிவுகளில் உதிரியாகப் பெயர் சுட்டியுள்ளார்[4]. இக்கால கட்டத்தில் நாட்டுப்புற இலக்கிய வகையுள் தனித்தனிப் பிரிவாகக் கருதப்படும் விடுகதைகள், பழமொழிகள் ஆகியவற்றை நாட்டுப்புறப் பாடல்களாகவே கருதிய போக்கினைக் காண முடிகிறது. பாடல்களை வகைப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் இக் காலகட்டத்தில் நாட்டுப்புறப் பாடல்களைச் சேகரிக்கும் பணி மிக அருகிக் காணப்பட்டதேயாகும். பாடல்கள் குறைவாகக் கிடைத்ததால் அவற்றை வகைப்படுத்தும் தேவை எழவில்லை. ஆயினும் வகைப்படுத்தும் முயற்சிக்கு இக்கால கட்டமே தூண்டுகோலாக இருந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது. பேராசிரியர் சாம்பமூர்த்தி பாடல்களுக்குப் பெயரிடும் முறையில் வகைப்படுத்தும் கூறுகள் இருப்பதைக் காணலாம். அதவாது பண்டிகைக் காலங்களில் பாடப்படும் எல்லாப் பாடல்களையும் பண்டிகைப் பாடல்கள் என்றும் தொழில் செய்யும் போது பாடப்படும் பாடல்களைத் தொழில்வகைப் பாடல்கள் என்றும் சுட்டியிருப்பது வகைப்படுத்தும் முயற்சியையே காட்டுகின்றது. தமிழக நாட்டுப்புறப் பாடல்களை வகைப்படுத்தும் தொடக்க கால முயற்சியாக இதனைக் கருதலாம்.

1.2. பல்வேறு அளவுகோல்களைக் கொண்டு வகைப் படுத்திய நிலை

பாடல் சேகரிக்கும் பணியில் பலர் ஈடுபடத் தொடங்கியதால் பல்வேறு வகைப்பட்ட பாடல்கள் கிடைத்தன. இவை அனைத்தையும் உதிரியாகப் பெயர் சுட்டுவது இயலாத தொன்றாகும். எனவே, பாடல்களை உதிரியாகப் பெயர் சுட்டும்

நிலை மாறி, தொடர்புடைய பாடல் தொகுதிகளைக் குறிப்பிட்ட தலைப்பின்கீழ் வகைப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்த அவசியத்தை உணர்ந்து இதனைத் தொடங்கி வைத்த பெருமை திரு கி.வா. ஜகந்நாதன் அவர்களைச் சாரும். இவரைத் தொடர்ந்து வேறு சிலரும் இம்முயற்சியில் ஈடுபட்டனர். இதனைக் காலவரிசைப்படி ஆராயலாம்.

1.2.1. திரு கி. வா. ஜகந்நாதன் அவர்கள் பாடல்களை 1. தொழில் செய்வார் பாடல், 2. இன்பப் பாடல், 3. உணர்ச்சிப் பாடல், 4. குழந்தைப் பாடல், 5. விளையாட்டுப் பாடல், 6. கருத்துப் பாடல், 7. கதைப் பாடல் என்று வகைப்படுத்துகின்றார்[5]. இதில் பாடப்படும் சூழல் (1,5), பாடலால் பயன் பெறுவோர் (4), பாடல் பொருண்மை (2, 3, 6), பாடல் வடிவம்-கதை(7) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பாடல்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

தொழில் செய்யும் போது இன்பப் பாடலைப் பாடுவது உண்டு. அது போலவே உணர்ச்சிப் பாடலுள் இன்பம், துன்பம் இரண்டும் அடங்கும். மேலும், கருத்துப்பாடல் என்பதற்குப் ''பாமரர் அல்லாதவரிடத்தில் வாய்மொழியாக வழங்கும் பாடல்கள்'' என்று விளக்கம் தருகின்றார். இங்கு அவர் குறிப்பிடும் பாடல் எது என்பதற்கான சான்று எதுவும் தரப்படவில்லை. கும்மி, ஒயில்கும்மி, கோலாட்டம், பஞ்சப்பாட்டு, வெள்ளப்பாட்டு முதலிய பாடல்களை எந்தப் பகுப்பில் அடக்குவது என்பதையும் ஆசிரியர் விளக்கவில்லை. எனவே, பல்வேறு அளவுகோல்களைக் கொண்ட இந்த வகைப்பாடு பொருத்தமற்றதாகவே உள்ளது என்பதை உணர முடிகிறது.

''மலையருவி'' நூலில் உள்ள பாடல்களை வகைப்படுத்தும் போது, ஆராய்ச்சி உரையில் தான் கூறிய வகைப்பாட்டினைப் பின்பற்றாமல் புதிய முறை ஒன்றைப் பின்பற்றுகின்றார் (காண்க அட்டவணை: கி.வா.ஜ.II). இவ்வகைப்பாடு முற்றிலும் பொருத்தமற்றது என்பதைப் பேராசிரியர் நா. வானமாமலை தெளிவாக்கியுள்ளார்[6].

1.2.2. திரு. அன்னகாமு அவர்கள் 1. கடவுள் துதி, 2. மழை, 3. நாட்டுச் சிறப்பு, 4. பிறப்பு வளர்ப்பு, 5. குழந்தைகளின் விளையாட்டு, 6. திருமணம், 7. தொழில், 8. நவீனம், 9. களியாட்டங்கள், 10. கதைப்பாட்டுக்கள், 11. வாழ்க்கையில் சோதனைகள். 12. வேதாந்தப் பாடல்கள், 13. ஆதிவாசிகளின் பாடல்கள், 14, மங்களம் என்று பாடல்களை வகைப்படுத்துகின்றார்.[7]

நாட்டுப்புறப் பாடல் மரபுகளையும் நூல் அழகினையும் மனதிற் கொண்ட வகைப்பாடாக இதனைக் கருதலாம். நாட்டுப் புறங்களில் எந்த ஒரு பாடல் நிகழ்ச்சியும் கடவுள் துதியோடு தொடங்கப்படுவதும் மங்களத்தோடு முடிவு பெறுவதும் மரபு இதனை மனதிற் கொண்டே ஆசிரியர் அவற்றை முதலிலும் முடிவிலும் அமைத்துள்ளார். மேலும் 2,3,4 பிரிவுகள் நாட்டுப்புறக் கதைப்பாடல் மரபினை ஓரளவு தழுவிச் செய்யப்பட்ட வகைப் பாடு எனக் கருதலாம். இவை நூலுக்கு அழகைத் தருகின்றன. ஆனால் பொருண்மையை அடிப்படையாகக் கொண்ட பிரிவுகள் (2, 3, 4, 8, 12) ஏனைய பிரிவுகளுக்குள் அடங்குவனவே. சான்றாக நவீனத்திற்கென்று தனிப்பாடல்கள் இருக்கலாம். ஆனால் அவை தொழில் செய்யும் போதோ களியாட்டத்தின் போதோ பாடப் படும் பாடல்களில் அமைந்திருக்கும். எனவே, அதனை ஒரு தனிப் பிரிவாகப் பிரிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆதிவாசிகளின் பாடல்களையும் ஏனைய பிரிவுகளுக்குள் வகைப்படுத்தலாம். அல்லது இவற்றோடு சேர்க்காமல் தனிப்பட ஆராயலாம். இவற்றை எல்லாம் மனதிற் கொண்டால் திரு அன்னகாமுவின் வகைப்பாடு நுண்மையானது என்று கூற முடியாது.

1.2.3. திரு ஆறு.அழகப்பன் அவர்கள் பாடல்களை 1. குழந்தைப்பாடல்கள் (Children's songs), 2. பக்திப்பாடல்கள் (Devotional Songs), 3. தொழிற் பாடல்கள் (Labourer's Songs), 4. கொண்டாட்டப்பாடல்கள் (Festival Songs), 5. உணர்ச்சிப் பாடல்கள் (Emotional Songs), 6. பன்மலர்ப் பாடல்கள் (Miscellaneous Songs) என்று வகைப்படுத்துகின்றார்[8]. பொருண்மையையும் (1, 2, 4, 5) சூழலையும் (3) அடிப்படையாகக் கொண்டு பாடல்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. முதல் ஐந்து பிரிவுகளிலும் அடங்காத ஏனைய அனைத்துப் பாடல்களும் ஆறாவது பிரிவில் அடக்கப்பட்டுள்ளன.

பன்மலப் பாடல்கள் போன்ற பகுப்பு முறைகள் பாடல்களை நுண்மையாக வகைப்படுத்த உதவாது. மேலும், உணர்ச்சிப் பாடல்கள் என்ற பகுப்பு முறையும் ஏற்புடையதல்ல. ஆசிரியர் இதனைக் காதல்உணர்ச்சி, ஒப்பாரி என இரண் டாக வகைபடுத்துகின்றார். காதல் உணர்ச்சியமைந்த ஒரு பாடல் தொழில் செய்யும் போதோ அல்லது கொண்டாட்டக் காலங் களிலோ பாடப்படுமானால் அப்பாடலை எந்தப் பிரிவில் அடக்கு

வது என்பது போன்ற குழப்பத்தினை இவ்வகைப்பாடு ஏற்படுத்துவதைக் காணலாம். எனவே, இவ்வகைப்பாடும் குறைபாடுடையதாகவே இருப்பதை உணர முடிகிறது.

1.2.4. திரு மா. கோதண்டராமன் அவர்கள் பாடல்களை 1. குழந்தைப் பாடல்கள், 2. காதல் பாடல்கள், 3. தொழிற் பாடல்கள், 4. ஒப்பாரிப் பாடல்கள், 5. தெய்வப் பாடல்கள், 6.பழமொழி விடுகதைப் பாடல்கள், 8. பன்மலர்ப் பாடல்கள், (கிராமியக்கலை- இயற்கைக் கதைப்பாடல்கள்-துணுக்குகள்-ஏசல்-தத்துவப் பாடல்கள்) என்று வகைப்படுத்தியுள்ளார்[9]. இவற்றுள் ஆறாவது பிரிவும் ஏழாவது பிரிவின் பல கிளைகளும் நாட்டுப் புறப் பாடல் என்ற பிரிவிலேயே அடங்காது. காதல் பாடல்களைத் தொழிற் பாடல்களிலேயே அடக்கலாம். இந்த வகைப்பாட்டில் கொண்டாட்டப் பாடல்களை அடக்க இயலவில்லை. இந்த வகைப்பாடு முற்றிலும் பொருத்தமற்றதாகவே உள்ளது.

1.2.5. கவிஞர் மா. வரதராஜன் அவர்கள் 1. தாலாட்டுப் பாடல்கள், 2. குழந்தைப் பாடல்கள், 3. வேடிக்கைப் பாடல்கள், 4. கும்மி, ஒயிலாட்டப் .பாடல்கள், 5. காதல் பாடல்கள், 6. விவசாயப் பாடல்கள், 7. தொழில் பாடல்கள், 8. ஒப்பாரிப் பாடல்கள், 9. வேதாந்தப் பாடல்கள், 10. பல்சுவைப்பாடல்கள் என்று பாடல்களை வகைப்படுத்துகின்றார்.[10] பாடுவோர் (2) பாடப்படும் சூழல் (1, 4, 6, 7, 8), பாடற் பொருண்மை (3, 5, 9) ஆகியவற்றின் அடிப்படையில் பாடல்கள் வகைப்படுத்தப் பட்டுள்ளன. முதல் ஒன்பது பிரிவிலும் அடங்காத பாடல்கள் பத்தாவது பிரிவில் அடக்கப்படுகின்றன. எனினும் பல்சுவைப் பாடல்கள் என்பது போன்ற வகைப்பாடு நுண்மையான வகைப் பாட்டுக்குத் துணை செய்யாது. ஆறாவது பிரிவு ஏழாவது பிரிவிலும் 3, 5, 9 ஆகிய பிரிவுகள் 4, 7 ஆகிய பிரிவுகளிலும் அடங்கும். இவ்வாறு பல குறைகளை உடையதாகவே இவ்வகைப் பாடும் காணப்படுகிறது.

1. 2. 6. டாக்டர் சு சண்முகசுந்தரம் அவர்கள் பாடல்களை 1. தாலாட்டு (Lallaby), 2. ஒப்பாரி (Lament), 3 சிறுவர்பாடல்கள் (Nursery Rhymns), 4. நடனப்பாடல்கள் (Dancing songs), 5. தொழிற்பாடல்கள் (Labour Songs), 6. மணப்பாடல்கள் (Marriage songs), 7. நாடோடிப் பாடல்கள் (Nomadic Songs) என்று வகைப்படுத்துகின்றார்.[11] இவைப் பாடப்படும் சூழலையும் (1, 2, 4, 5, 6) பாடுவோரையும் (3, 7) அடிப்படையாகக் கொண்டு

வகைப்படுத்தப்பட்டுள்ளன. பல அளவுகோல்களை வைத் வகைப்படுத்திய வகைப்பாடுகளுள் இவ் வகைப்பாடு சிறப்பாக காணப்படுகிறது. ஆயினும் வெள்ளம், தீவிபத்து, கொலை தொடர்பான பாடல்களை இவ் வகைப்பாட்டினுள் அடக்க இய வில்லை.

1.3. ஒரே அளவுகோலைக் கொண்டு வகைப் படுத்திய நிலை

திரு கி. வா. ஜகந்நாதனைப் பின்பற்றி அல்லது தொடர்ந்து பல ஆய்வாளர்கள் பல்வேறு அளவுகோல்களை வைத்து நாட்டுப் புறப் பாடல்களை வகைப்படுத்தி உள்ளத்தையும் அவை நுணுக்க மாக அமையாததையும் மேலே கண்டவற்றால் உணரலாம். இனி ஒரே அளவுகோலை வைத்து நாட்டுப்புறப் பாடல்களை வகைப் படுத்திய நிலையை ஆராயலாம்.

1.3.1. பொருண்மை

1.3.1.1. பேராசிரியர் நா. வானமாமலை அவர்கள் முதன் முதலில் பொருண்மை என்ற ஒரே அளவுகோலை அடிப்படையாகக் கொண்டு பாடல்களை 1 தெய்வங்கள், 2 மழையும் பஞ்சமும், 3. தாலாட்டு, 4. விளையாட்டு, 5. காதல், 6. திருமணம், 7. குடும்பம், 8. சமூகம், 9. உழவும் தொழிலும், 10. ஒப்பாரி என்று வகைப்படுத்துகின்றார்.[12] நாட்டுப்புறஇயல் ஆய்வாளர்கள் பலராலும் ஏற்றுக்கொள்ளப் படுவதோடு பின்பற்றப்பட்டு வரும் இவ்வகைப்பாடு பற்றிச் சிறிது ஆழமாகச் சிந்திக்கலாம்.

''தமிழர் நாட்டுப்பாடல்கள்'' என்ற நூல் தொகுப்பிலிருந்து சில பாடல்களைக் காணலாம்.

1) வண்டாளம் மரத்துக்காடு
வண்ணமுத்து உழுகுங்காடு
தங்கம் விளையுங்காடு
தரிசாய்க் கிடக்கிறது
மஞ்சள் பூசியல்லோ
மதுரைப் பாதை போறபுள்ளே
ஒம்மஞ்சள் வாடைதட்டி
வரப்புவெட்டக் கூடலியோ?[13]

2) நாலுமூல வயலுக்குள்ளே
நாத்துநடும் குள்ளப்பெண்ணே
நாத்து நடும் கையாலே என்னையும்
சேத்துநட லாகாதோ?[14]

நடந்து செல்லும் காதலியின் மஞ்சள் வாடை மயக்கத்தினால் வரப்பு வெட்ட முடியாமல் தவிக்கும் காதலனை முதல்பாடலிலும் நாற்றுநடும் பெண்ணிடம் காதல் மொழி பேசும் காதலனை இரண்டாவது பாடலிலும் காண்கிறோம். முதல் பாடல் வரப்பு வெட்டிக் கொண்டிருப்பவனால் பாடப்படுவது இரண்டாவது பாடல் நடவு நடும் பெண்ணருகில் வேறு வேலையில் ஈடுபட்டிருப்பவனால் பாடப்படுவது. இரண்டுமே தொழில் செய்யும்போது பாடப்படும் பாடல்கள்தான். இரண்டுமே காதலைப் பொருண்மையாகக் கொண்டவைதான். பேராசிரியர் நா. வானமாமலை அவர்களின் வகைப்பாட்டின்படி இப்பாடல்களைக் காதல் என்ற பிரிவில் அடக்க வேண்டும். ஆனால் அவர் முதல் பாடலைக் காதல் என்ற பிரிவிலும் இரண்டாவது பாடலை உழவும் தொழிலும் என்ற பிரிவிலும் அடக்கியுள்ளார். பொருண்மையை அடிப்படையாகக் கொண்ட வகைப்பாடே இக் குழப்பத்திற்கான காரணமாகும். ஒரு சான்று காணலாம்.

தொழில் செய்யும்போது பாடப்படும் அனைத்துப் பாடல்களும் தொழிற் பாடல்களே. ஆனால் பொருண்மையை அடிப்படையாகக் கொண்ட வகைப்பாட்டின்படித் தொழிலைப் பற்றிய குறிப்புக்கள் கொண்ட பாடல்களே தொழிற்பாடல்கள் என்று கொள்ளவேண்டும். ஒரே பாடலில் தொழிலைப் பற்றிய குறிப்பும் வரும்போது அப்பாடலைத் தொழில் என்ற பிரிவில் அடக்குவதா காதல் என்ற பிரிவில் அடக்குவதா என்ற குழப்பம் ஏற்படுகிறது. இரண்டனுள் எப் பொருண்மை முனைப்பாக இருக்கிறதோ அப்பிரிவில் அடக்கலாம் என்று கொண்டாலும் இரண்டிற்கும் முக்கியத்துவம் தந்துள்ள பாடல்களை வகைப் படுத்துவதில் குழப்பம் ஏற்படுவது தவிர்க்க இயலாததொன்றாகும். ஆனால் மேலே காட்டப்பட்ட முதலிரண்டு பாடல்களிலும் காதல் பொருண்மையே முனைப்பாக உள்ளது. ஆயினும் இரு பாடல்களிலும் தொழில் பற்றிய குறிப்பு இடம் பெறுவதால் ஏற்பட்ட குழப்பமே அவை வெவ்வேறு பிரிவுகளில் இடம் பெற்றதற்கான காரணமாகும். அதே நூலிலிருந்து மற்றொரு சான்று காணலாம்.

கொழுந்தி: இலந்தைப் பழம்போல
இருபேரும் ஒருவயது
கொழுத்தபுள்ள நான்வாரேன்
கொண்டணைச்சிப் போயிருங்க

கொழுந்தன்: கொண்டும் அணைச்சிருவேன்
கொடுங்கையிலே ஏந்திருவேன்
சரியான கொங்கைக்குச்
சட்டம் பொருந்தாதே
சித்தருவா கொய்யாதோ
சிறுமிளகு உறையாதோ
சிறுவன் கொடுத்தகாசு
செல்லாதோ உந்தனுக்கு

கொழுந்தி: செம்மறி வீசக்காரா
செவத்தமச்சான் ஏகொழுந்தா
செத்த வளர்ந்தியிண்ணாச்
சேந்திடுவேன் உன்மேலே
இன்னுங் கொஞ்சம் வளர்ந்தியானா
இறந்தாலும் மறப்பதில்லை[15]

இப்பாடலும் காதலையே பொருண்மையாகக் கொண்டுள்ளது. ஆனால் இப்பாடல் ''குடும்பம்'' என்ற பிரிவில் அடக்கப் பட்டுள்ளது. குடும்பத்திலுள்ளவரிடையே நடைபெறுவதாகக் கொண்டு இப்பாடலைக் ''குடும்பம்'' என்ற பிரிவில் அடக்கினார் போலும். ஆயினும் இந்த வகைப்பாடு குழப்பத்தை ஏற்படுத்து கிறது என்பதை உணரமுடிகிறது.

வேறொரு சான்று காணலாம்:

பட்டுத் தலயாணி
பாட்டமுடு கச்சேரி
பட்டுநெறங் கொலைஞ்சேன்—நான்
பாட்டமுட்டு சீரெளந்தேன்
புள்ளித் தலகாணி
பொறந்தஇடம் கச்சேரி

புள்ளிநெறங் கொலைஞ்சேன்—நான்
பொறந்தஇடம் சீரழிஞ்சேன்
சங்குமணி யடிக்கும்

சர்க்காரு என்தொரையே
சாந்திருக்கும் போலீசாரே
சர்க்காரு வக்கீலே-நான்
தந்ததை வாங்கிக்கிட்டு என்
சவத்தையும் விட்டிடுங்கோ

குண்டுமணி யடிக்கும்
கோர்ட்டாரு எந்தொரையே—நான்
குடுத்ததை வாங்கிக்கிட்டு என்
கொளந்தையை விட்டிடுங்க[16]

இப்பாடல் "குடும்பம்" என்ற பிரிவில் அடக்கப்பட்டுள்ளது. உண்மையில் இது ஒரு ஒப்பாரிப் பாடலாகும். ஒப்பாரிப் பாடல்கள் அனைத்துமே குடும்பச் செய்திகளைப் பொருண்மையாகக் கொண்டிருக்கும். பொருண்மையை அடிப்படையாகக் கொண்ட வகைப் பாட்டின்படி இத்தகைய பாடல்களை ஒப்பாரி என்ற பிரிவில் அடக்குவதா அல்லது குடும்பம் என்ற பிரிவில் அடக்குவதா என்ற குழப்பம் ஏற்படுகிறது.

மேலும், ஒரு சூழலில் பாடப்படும் ஒரு பாடல் பல்வேறு பாடல் துணுக்குகளின் சேர்க்கையாகலாம். அவ்வகைப் பாடல்களில் பல்வேறு பொருண்மை அமைந்திருக்கும். பொருண்மை அடிப்படையில் வகைப்படுத்த வேண்டுமானால் பாடலைச் சிறு சிறு துண்டுகளாக மாற்ற வேண்டிய நிலை ஏற்படும். இவ்வாறு மாற்றுவது பாடல் பாடுவோரின் திறமை, நினைவாற்றல், உத்தி முறை முதலியவற்றை அறிந்து கொள்ளப் பயன்படாது.

இதுவரை கண்டவற்றால் பொருண்மையை அடிப்படையாகக் கொண்ட வகைப்பாடு நுண்மையானது அல்ல என்று முடிவு செய்யலாம்.

1.3.1.2. திரு க. கிருட்டிணசாமி அவர்கள் நா. வானமாமலை அவர்களைப் பின்பற்றிப் பாடல்களை 1. பக்தி, 2. காதல், 3. மங்கலவாழ்த்து, 4. தாலாட்டு, 5. தொழில், 6. சமுதாயம், 7. ஒப்பாரி என்று பொருண்மை அடிப்படையில் வகைப்படுத்துகின்றார்.[17] இவ்வகைப்பாட்டிலும் மேலே விளக்கப்பட்ட குறைபாடுகள் இருப்பனதக் காணமுடிகிறது.[18]

1.3.2. மனிதப் பருவங்கள்

திரு சா. வளவன் அவர்கள் மனிதப் பருவங்கள் என்ற ஒரே அளவுகோலை அடிப்படையாகக் கொண்டு பாடல்களை மழலை,

இளமை, முதுமை என்ற மூன்று பிரிவுகளில் அடக்க முயல்கிறார்.[10] தாலாட்டு, விளையாட்டுப் பாடல் முதலியனவற்றை மழலையிலும் காதல், தொழில், மணம் தொடர்பான பாடல்களை இளமையிலும் பக்தி, ஒப்பாரி, விழா, பொழுதுபோக்குத் தொடர்பான பாடல்களை முதுமையிலும் அடக்குகின்றார். ஆனால் அவர் மழலை, இளமை, முதுமை ஆகிய மூன்று பருவங்களுக்கும் வயது வரையறை எதுவும் செய்யவில்லை. இந்த வகைப்பாடு பாடுவோரை அடிப்படையாகக் கொண்டது என்று கொண்டால் தாலாட்டினை இளமையிலும் முதுமையிலும் சேர்க்க வேண்டும். அதுபோல பக்தி, ஒப்பாரி, விழா, பொழுதுபோக்கு முதலியனவற்றை இளமையிலும் முதுமையிலும் அடக்கலாம். இந்த வகைப்பாடு பாடற் பொருண்மையை அடிப்படையாகக் கொண்டது எனக் கொண்டால் இளமையில் பக்தி, ஒப்பாரி, பொழுதுபோக்கு முதலிய பொருண்மையுடைய பாடல்களைப் பாடமாட்டார்கள் என்றோ முதுமையில் காதல், மணம் போன்ற பொருண்மை அமைந்த பாடல்களைப் பாடமாட்டார்கள் என்றோ கூறமுடியாது. எனவே, மனிதப் பருவங்களை அடிப்படையாகக் கொண்ட வகைப்பாடும் பொருத்தமற்றதாகவே தெரிகிறது.

2. புதிய வகைப்பாடு

இதுவரை கண்டவற்றால் தமிழக நாட்டுப்புறப் பாடல்களுக்கு ஒரு புதிய வகைப்பாடு தேவை என்பதை உணர்ந்துகொள்ள முடிகிறது. நாட்டுப்புறப் பாடல்களை அவை வழங்கும் சமுதாயச் சூழல் என்ற ஒரே அளவுகோலை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்துவதே சிறப்பானதாகவும் பொருத்தமானதாகவும் தெரிகிறது. சூழலை அடிப்படையாகக் கொண்டு தமிழக நாட்டுப்புறப்பாடல்களைத் தாலாட்டு, குழந்தை வளர்ச்சிநிலைப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள் தொழிற்பாடல்கள், வழிபாட்டுப் பாடல்கள், கொண்டாட்டப்பாடல்கள், இரத்தல் பாடல்கள், இழப்புப் பாடல்கள், என்று எட்டுப் பிரிவுகளாக வகைப்படுத்திக் கொள்ளலாம் (விளக்கப் படங்கள் காண்க).

2.1. தாலாட்டு

குழந்தைகளை மகிழ்ச்சிப்படுத்தும் அல்லது தூங்கச் செய்யும் சூழலில் தாலாட்டு பாடப்படுகிறது. ''தால்'' என்ற சொல்லுக்கு நாக்கு என்று பொருள். நாவினை ஆட்டிப் பாடுவதால் தாலாட்டு

என்று பெயர் பெற்றது. தாலாட்டு பேச்சு வழக்கில் ரோராட்டு, ஆராட்டு, ராராட்டு, ஓராட்டு, தாராட்டு என்றெல்லாம் வழங்கப் படுகிறது. இவை நாவினை ஆட்டிப் பாடும்போது எழும் ஒலியால் பெற்ற பெயர்கள். பாடலமைப்பாலும் பொருண்மையாலும் பாடப்படும் சூழலாலும் தாலாட்டினைத் தனி வகையாகக் கருதலாம். இதனைக் குழந்தையின் தாய், பாட்டி, அத்தை, சகோதரி, செவிலி முதலியோர் பாடுவர். ஆண்கள் தாலாட்டுப் பாடுவதில்லை. விதிவிலக்காகச் சில நேரங்களில் பாடுவதுண்டு.

2.2. குழந்தை வளர்ச்சிநிலைப்பாடல்கள்

குழந்தை வளர்ச்சி நிலையின் ஒவ்வொரு கட்டத்திலும் பாடல்கள் மாறுபடுகின்றன. குழந்தை தவழும் போதும் உண்ணும்போதும் சாய்ந்தாடும் போதும் கை வீசும்போதும் கை தட்டும்போதும் பெற்றோரும் உற்றாரும் மகிழ்ந்து பாடி அச் செயல்களை மேலும் செய்யுமாறு குழந்தைகளைத் தூண்டுவர். மேலும் அம்புலி காட்டும்போதும் நாப்பயிற்சி அளிக்கும்போதும் சிரிப்பூட்டும் போதும் பெற்றோர் பாடல்களைப் பாடுவதும் பாடு விப்பதும் உண்டு. இத்தகைய பாடல்களைத் தனியே வகைப் படுத்தல் பொருத்தமாகத் தெரிகிறது.

2. 3. விளையாட்டு பாடல்கள்

குழந்தைகள் ஓடியாடி விளையாடும் சிறுவர்களாக மாறத் துவங்கும்போது பெரியோர்களாலும் சற்று வளர்ச்சியடைந்த சிறுவர்களாலும் அவர்களுக்குப் பல்வேறு விளையாட்டுக்கள் கற்றுத் தரப்படுகின்றன. அந்த விளையாட்டுக்கள் பலவற்றுள் பாடல்கள் இன்றியமையாப் பங்கு வகிக்கின்றன. இவ்வாறு விளையாடும் சூழல்களில் பாடப்படும் பாடல்களை விளையாட்டுப் பாடல்கள் என்ற பிரிவில் அடக்கலாம்.

இந்த விளையாட்டுக்களை உடற்பயிற்சி விளையாட்டு (Physical play), வாய்மொழி விளையாட்டு (Verbal play) என இரண்டாக வகைப்படுத்தலாம்.

2.3.1. உடற்பயிற்சி விளையாட்டு

உடலுக்குப் பயிற்சி கொடுக்கும் விளையாட்டுக்களை உடற் பயிற்சி விளையாட்டுக்கள் எனலாம். உடல் வலிவு பெற இத் தகைய விளையாட்டுக்கள் உதவுகின்றன. சடுகுடு, திம்பி, கண்ணா மூச்சி, வெயிலா நிழலா, ஏழாங்காய், கோலி முதலிய விளை

யாட்டுக்கள் இப்பிரிவில் சேரும். மேலும், வாழ்வில் நடைபெறும் வீடு கட்டல், திருமணம், இறப்புச் சடங்கு முதலியவற்றைத் தாங்கள் கண்டவாறே நடித்து விளையாடுவதைக் குழந்தைகளிடம் காணமுடிகிறது. இத்தகைய விளையாட்டுக்களைப் போலச் செய்யும் விளையாட்டுகள் (Imitation Plays) என்றுஅழைக்கலாம். இவை பெரும்பாலும் உடற்பயிற்சி விளையாட்டுக்களாகவே காணப்படுகின்றன.

2.3.2. வாய்மொழி விளையாட்டு

ஓரிடத்திலிருந்து கொண்டே வாய்மொழியாக விளையாடும் விளையாட்டுக்களை வாய்மொழி விளையாட்டுக்கள் எனலாம். ஒருவரையொருவர் கேலிசெய்து பாடும் கேலி விளையாட்டு, ஒருவருக்கொருவர் திறமைகளைக் காட்டிக் கொள்ளும் வினா விடை விளையாட்டு முதலியன இப்பிரிவில் சேரும். புதிர் விளையாட்டும் இப்பிரிவில் சேருமாயினும் புதிர்களை நாட்டுப்புற இலக்கியங்களின் ஒரு தனிவகையாகக் கொள்வதால் அவற்றை இங்குச் சேர்க்கவில்லை.[20]

2.4. தொழிற் பாடல்கள்

வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு தொழிலில் ஈடுபட வேண்டியுள்ளது. செய்யும் தொழில்கள் வேறுபட்டாலுங்கூட அவற்றின் நோக்கம் ஒன்றே. தொழிலில் ஈடுபட்டிருக்கும் சூழலில் தொழிலின் கடுமை தெரியாமல் இருக்கும் பொருட்டும் தொழிலுக்குத் துணைபுரிய வேண்டியும் பாடல்கள் பாடப்படுவதுண்டு. இவ்வகைப் பாடல்களைத் தொழிற்பாடல்கள் எனலாம்.

தொழில்களை வேளாண்மைத் தொழில்கள் என்றும் வேளாண்மையல்லாத் தொழில்கள் என்றும் இரண்டாகப் பிரித்துக் கொள்ளலாம்.

2.4.1. வேளாண்மைத் தொழில்கள்

வேளாண்மை செய்யும் சூழல்களில் பாடப்படும் பாடல்களை அவ்வத் தொழிற் பெயர்களாலேயே சுட்டலாம். சான்றாக ஏற்றமிறைக்கும் சூழலில் ஏற்றமிறைப்போர் பாடும் பாடல்களை ஏற்றப் பாடல்கள் என்று அழைப்பதைக் கொள்ளலாம். இவ்வாறே ஏர்ப்பாடல், நடவுப்பாடல், களைவெட்டும் பாடல்,

அறுவடைப்பாடல் என்று பிற சூழல்களில் பாடப்படும் பாடல்களைப் பெயர்சுட்டி அழைக்கலாம்.

2.4.2 வேளாண்மையல்லாத் தொழில்கள்

வேளாண்மை அல்லாத பிற தொழில்கள் செய்யும்போது பாடப்படும் பாடல்களையும் அவ்வத் தொழிற் பெயர்களாலேயே சுட்டலாம். நெல் குற்றும் பாடல், சுண்ணாம்பு இடிக்கும் பாடல், பாரஞ்சுமக்கும் பாடல், வண்டியோட்டும் பாடல், மீன்பிடிப்புப் பாடல் முதலியன இவ்வகையுள் அடங்கும்.

2 5. வழிபாட்டுப் பாட்டல்கள்

தங்களுக்கு நன்மை வேண்டும்போதும் நன்மை கிடைத்த போதும் அந்த நன்மை கிடைக்கச்செய்ததற்காக நன்றி செலுத்தும் போதும் கிராமப்புற மக்கள் தெய்வங்களை வழிபட்டுச் சிறப்புச் செய்வர் கிராமப்புறங்களில் பெருந் தெய்வ வழிபாடு காணப் பட்டாலும் சிறு தெய்வ வழிபாடுகளே மிகுதி. அவ்வாறு வழிபடும் காலங்களில் வழிபடும் தெய்வங்களைக் குறித்துப் பாடல்கள் பாடப் படும். அம்மை வார்த்திருக்கும் போது மாரியம்மனை வேண்டிப் பாடல் பாடப்படும். விளக்குக் கேள்வியின் போது தெய்வங்கள் துணை நிற்குமாறு வேண்டிப் பாடல்கள் பாடப்படும். பூசை, நோன்பு, சாமி ஊர்வலம் முதலிய சூழல்களில் பாடல்கள் பாடப் படும். இவ்வாறு தெய்வங்களை வழிபடும் சூழல்களில் பாடப்படும் பாடல்கள் அனைத்தையும் வழிபாட்டுப் பாடல்கள் என்ற பிரிவில் அடக்கிக் கொள்ளலாம். தொழில் செய்யும் போது பாடப்படும் பாடல்களிலும் தெய்வங்களைப் போற்றி வழிபடும் பாடல்கள் இடம் பெறும். வழிபாடு அதன் பொருளாக இருந்தாலும் பாடப் படும் சூழலால் அவற்றைத் தொழிற்பாடல்கள் என்று கருத வேண்டுமேயொழிய வழிபாட்டுப் பாடல்கள் என்று கருதக் கூடாது[21].

2. 6. கொண்டாட்டப் பாடல்கள்

கொண்டாட்டம் என்ற சொல்லுக்கு சந்தோஷம், உற்சவ முதலிய விசேஷங்கள் என்று தமிழ்ப் பேரகராதி பொருள் கூறு கின்றது. மகிழ்ச்சியை ஏற்படுத்தும் அனைத்து நிகழ்ச்சிகளையும் கொண்டாட்டம் எனலாம். கொண்டாட்டமான சூழல்களில் பாடப்படும் அனைத்துப் பாடல்களையும் கொண்டாட்டப் பாடல்கள் என்று அழைக்கலாம்.

கொண்டாட்டங்களைப் பொது, சிறப்பு என இரண்டாகப் பிரித்துக் கொள்ளலாம்.

2. 6. 1. பொது

ஓய்வு நேரங்களில்- நிலவுக் காலங்களில்-மகளிரும் ஆடவரும் மகிழ்வுடன் ஆடிப் பாடுவது கிராமப் புறங்களில் காணக்கூடிய அன்றாட நிகழ்ச்சியாகும். இதனைப் பொதுவான கொண்டாட்டங்கள் எனலாம்.

2, 6. 2. சிறப்பு

விழாவெடுத்துக் கொண்டாடும் கொண்டாட்டங்களைச் சிறப்புக் கொண்டாட்டங்கள் எனலாம். பொதுக் கொண்டாட்டங்களில் பாடப்படும் அனைத்துப் பாடல்களும் சிறப்புக் கொண்டாட்டங்களின் போதும் பாடப்படும். எனவே சிறப்புக் கொண்டாட்டப் பாடல்கள் என்பது பொதுக் கொண்டாட்டப் பாடல் களையும் உள்ளடக்கியது எனக் கருதலாம். இவற்றைச் சமுதாயத் திற்குரியவை, குடும்பத்திற்குரியவை என்று இரண்டாக வகைப் படுத்திக் கொள்ளலாம்.

2. 6. 2. 1. சமுதாயத்திற்குரிய கொண்டாட்டங்கள்

இவற்றைச் சமயத் தொடர்பானவை, சமயத் தொடர் பற்றவை என்று இரண்டாகப் பிரித்துக் கொள்ளலாம்.

2. 6. 2. 1. 1. சமயத் தொடர்பானவை

இவற்றை இந்து சமயத்தைச் சேர்ந்தவை, பிற சமயங்களைச் சேர்ந்தவை என்று இரண்டாகப் பிரித்துக் கொள்ளலாம்.

2. 6. 2, 1. 1. 1. இந்து சமயம்

இந்து சமயத்தைச் சேர்ந்த கொண்டாட்டங்களுக்குப் பொங்கல், தீபாவளி போன்று நாடு முழுவதும் கொண்டாடும் பண்டிகைகளையும் கார்த்திகை தீபம், ஆடிப் பெருக்கு போன்று சில பகுதிகளுக்குரிய விழாக்களையும் சிறுதெய்வ வழிபாட்டு விழாக்களையும் சான்றாகக் கொள்ளலாம். இத்தகைய கொண்டாட்டங்களின்போது பொதுமக்கள் பல்வேறு களியாட்டங்களில் ஈடுபடுவர். மக்கள் தாங்களே களியாட்டங்களில் நேரடியாகப்பங்கு பெறுவதும் கலைஞர்களைக் கொண்டு களியாட்டங்கள் நிகழ்த்தச்

செய்து அதைக் கண்டு கேட்டு மகிழ்தலும் உண்டு. சூழலைப் பயன்படுத்திக் கொண்டு சில கலைஞர்கள் தாங்களாகவே களியாட்டங்கள் நிகழ்த்தி வெகுமதி பெறுதலும் உண்டு. இச் சூழலில் பாடல்கள் பாடப்படும். இப் பாடல்களைப் பொது மக்கள் பாடல்கள், கலைஞர்கள் பாடல்கள் என்று இரண்டாக வகைப்படுத்திக் கொள்ளலாம்.

2. 6. 2. 1. 1. 1. 1. பொதுமக்கள் பாடல்கள்

பொதுமக்கள் கும்மி, கோலாட்டம் முதலியவற்றில் நேரடி யாகப் பங்கு பெறுவர். இச்சூழல்களில் அவர்களால் பாடப்படும் பாடல்களைப் பொதுமக்கள் பாடல்கள் எனலாம்.

2. 6. 2. 1. 1. 1. 2. கலைஞர் பாடல்கள்

கலைஞர்கள் பொதுமக்களின் ஆதரவுடன் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்துவர். கரகாட்டம், சிலம்பாட்டம், காவடியாட் டம், பொய்க்கால் குதிரையாட்டம், புலியாட்டம், மயிலாட்டம் முதலிய பாடல் இடம் பெறாத கலை நிகழ்ச்சிகளைத் தவிர்த்துப் பாடல் இடம் பெறும் கலைநிகழ்ச்சிகளும் மிகுதியாக இடம் பெறும். அவற்றைக் கதைத் தொடர்பு நிகழ்ச்சிகள், கதைத் தொடர்பில்லா நிகழ்ச்சிகள் என்று இரண்டாகப் பிரித்துக் கொள் ளலாம்.

2 6.2.1.1.1.2.1 கதைத் தொடர்பு நிகழ்ச்சிகள்

கதையோடு தொடர்புடைய நிகழ்ச்சிகளுள் கதைப்பாடல் நிகழ்ச்சி, வில்லுப்பாட்டு நிகழ்ச்சி, தெருக்கூத்து, தோல் பொம்மலாட்டம், கொலைசிந்து ஆகியன சிறப்புடையன. இவை ஒவ்வொன்றும் தனித்தன்மை கொண்டவை கதைப்பாடல் நிகழ்ச் சியை ஒரு கலைஞன் தனது கலைக் குழுவினடன் பம்பை, உடுக்கை. சிலம்பு, தாளம் முதலிய இசைக் கருவிகளின் துணை யோடு நடத்துவான்[22] வில்லுப்பாடல் நிகழ்ச்சியும் ஏறத்தாழ இதைப் போன்றதே ஆனாலும் இசைக் கருவிகள் இரண்டிலும் வேறுபடுகின்றன. அதற்கேற்பப் பாடப்படும் முறையிலும் வேறு பாடு உண்டு. வில்லுப் பாடல் நிகழ்ச்சி, அதில் சிறப்பிடம் பெறும் "வில்" என்னும் இசைக் கருவியால் பெற்ற பெயராகும். தெருக் கூத்து நிகழ்ச்சி கலைஞர் குழுவினரால் வேடமிட்டு நடிக்கப்படுவ தாகும் .வேடமிட்டு நடிக்கப்படும் தன்மையால் முன் இரண்டிலிருந்

தும் இது வேறுபடுகிறது. தோல்பொம்மலாட்டம் இதனோடு ஓரளவு தொடர்புடையது ஆயினும் இதில் மனிதன் நேரடியாகப் பங்கு பெறுவதில்லை. திரைமறைவிலிருந்து தோல்பொம்மைகளை ஆட்டுவிக்கின்றான். கொலைசிந்து, தற்கொலை சிந்து முதலிய வற்றைக் கலைஞன் குழுவாக இல்லாமல் தனியாகப் பாடுவான். உடுக்கை போன்ற இசைக் கருவியைப் பயன்படுத்துவதும் உண்டு. இவை அனைத்தும் கலைஞர்களால் பாடப்படும் கதையோடு தொடர்புடைய பாடல் நிகழ்ச்சிகள் என்ற அளவில் ஒன்றுபடு கின்றன.

கதைத் தொடர்பு நிகழ்ச்சிகளின்போது கதையோடு தொடர் புடைய பாடல்களும் தொடர்பற்ற உதிரிப் பாடல்களும் இடம் பெறுவதுண்டு. இத்தகைய உதிரிப் பாடல்களில் பல அவ்வக் கால நிகழ்ச்சிகளைச் செய்தியாகவோ விமர்சனமாகவோ வெளியிடுவன வாக இருக்கும், பஞ்சப்பாடல், புயல்-வெள்ளப்பாடல், விபத்துப் பாடல் முதலியன இதில் அடங்கும். இவை தவிர, நகைச்சுவையை முதல் நோக்கமாகக் கொண்ட ஏராளமான உதிரிப் பாடல்களும் இது போன்ற நிகழ்ச்சிகளில் இடம் பெறும்.

2.62.1.1.1.2:2. கதைத்தொடர்பில்லா நிகழ்ச்சிகள்

கலைஞர் குறவன்-குறத்தி வேடமிட்டுக் கொண்டு உறுமி மேளம் முழங்க ஆடிப்பாடும் நிகழ்ச்சியை இதற்குச் சான்றாகக் கூறலாம். இந்நிகழ்ச்சியின்போது பாடப்படும் பாடல்களை "உறுமி மேளப் பாடல்கள்" என்று கூறலாம்.

2.6.2.1.1.2. பிற சமயங்கள்

இசுலாமிய, கிருத்துவ சமயத்தவர்களும் பிற சமயத்தவர் களும் சமயத் தொடர்பான விழாக்களைக் கொண்டாடும் போது தற்காலத்தில் பொதுவாக நாட்டுப்புறப் பாடல்களைப் பாடுவதில்லை. நிலவுக் காலங்களில் தங்கள் மகிழ்ச்சியினைக் கொண்டாடும் போது இந்து சமயத்தாருடன் சேர்ந்து கும்மி, கோலாட்டம் போன்ற ஆடல்களில் கலந்து கொள்வதுண்டு. அப் போது தத்தம் சமயத்தைச் சிறப்பிக்கும் பாடல்களை அவர்கள் பாடுவதுண்டு. இதுபோன்ற பாடல்களை அவ்வச் சமயத்தலைவர் கள் நாட்டுப்புறப் பாடல் அமைப்பில் பாடி அவர்களுக்குப் போதித்திருப்பர்.

2.6.2 1.2. சமயத் தொடர்பற்றவை

இக்காலத்தில் சமயத்தோடு தொடர்பற்ற பல கொண்டாட்டங் கள் நடைபெறுகின்றன. அரசியல் ஊர்வலங்கள், தலைவர்களின் பிறந்த நாள் விழாக்கள் போன்றவை குறிப்பிடத்தக்கன. இவற் றுள் நாட்டுப்புறப் பாடல்கள் சிற்சில மாற்றங்களுடன் இடம் பெறுவதுண்டு.

2.6.2.2. குடும்பத்தொடர்பான கொண்டாட்டங்கள்

இதனைக் கொண்டாட்டப்பாடல்களின் இரண்டாவது பெரிய பிரிவாகக் கருதலாம். குடும்பத்திற்குரிய கொண்டாட்டங்களில் அந்தக் குடும்பத்தினரும் உறவினர்களும் மட்டுமே கலந்து கொள் வர். காதணிவிழா, மஞ்சள் நீராட்டுவிழா, திருமணம் அதனைச் சார்ந்த விழாக்கள், வளைகாப்பு விழா முதலியன குடும்பத் தொடர்பான கொண்டாட்டங்களாகும். இக் கொண்டாட்டச் சூழல்களில் பாடப்படும் பாடல்களை அவ்வந் நிகழ்ச்சிகளின் பெயரால் காதணிவிழாப் பாடல்கள், மணவிழாப் பாடல்கள், சம்பந்தப்பாடல்கள், வளைகாப்புப் பாடல்கள் என்று பெயர் சுட்டி அழைக்கலாம்.

2.7. இரத்தல் பாடல்கள்

இரத்தலாவது யாசித்தல். ஊர் ஊராகச் சென்று யாசித்து வாழ்வதையே வாழ்க்கையாக உடைய நாடோடிகள் பலர் உள் ளனர். பிச்சைக்காரர்கள், குடுகுடுப்பைக்காரர்கள், குறி சொல்லி கள், உண்டிபிலிகாரர்கள் முதலியோர் இவ்வகையினர். இவர்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான உணவு,உடை முதலியவற்றை யாசிக்கும் போது பாடல்கள் பாடுவதுண்டு. பெரும்பாலும் பாடு வோரின் தேவை பற்றியும் பொருளளிப்போரின் சிறப்பு, எதிர் காலம் பற்றியும் பாடல்கள் அமைந்திருக்கும். பொருள்தர மறுப் போரின் கருமித்தனத்தைக் கேலி செய்யும் பாடல்களும் உண்டு. இவை அனைத்தும் இரத்தலையே - யாசித்தலையே - முதன்மை நோக்காக உடையவை. ஆதலால் இவற்றை இரத்தல் பாடல்கள் என்ற பிரிவில் அடக்குவது பொருத்தமாகத் தெரிகிறது.

2.8. இழப்புப் பாடல்கள்

இழப்பாவது யாதேனும் ஒன்றை இழத்தல் என்று பொருள் படும். தமக்கு மிக நெருங்கியவர்களையோ அல்லது தம் உடைமை

களையோ இழக்கும்போது ஏற்படும் சோகத்தில் பாடல்கள் பாடப் படும். அச்சூழல்களில் பாடப்படும் பாடல்களை இழப்புப் பாடல் கள் எனலாம். இழப்புப் பாடல்களை உயிர் இழப்புப் பாடல்கள், பிற இழப்புப் பாடல்கள் என்று இரண்டாக வகைப்படுத்தலாம்.

2.8.1. உயிர் இழப்புப் பாடல்கள்

இதனை மகளிர் பாடுவன. கலைஞர் பாடுவன என்று இரண்டாகப் பிரித்துக் கொள்ளலாம்.

2.8.1.1. மகளிர் பாடுவண

நெருங்கிய உறவினர்கள் இருக்கும்போது இழப்பின் துயரம் தாங்காமல் அழும் மகளிர் [இறந்தவர்களின் சிறப்புகளையும் அவர்களை இழந்ததால் தாம் அடையப் போகும் துயரங்களையும் பாடலாகப் பாடுவர் கணவன், பிள்ளைகள், தாய், தந்தை, உடன் பிறந்தோர், மாமனார், மாமியார், கொழுந்தன், கொழுந்தி, சுற்றத்தார் ஆகியோர் இறக்கும்போது பாடுவதற்கென்று தனித் தனிப் பாடல்கள் உள்ளன. இப்பாடல்களைப் பாடப்படும் சூழல் அடிப்படையில் இறந்தவுடன் பாடும் பாடல், எட்டாம் நாள் பதினாறாம் நாள் சடங்கில் பாடப்படும் பாடல், இறந்து பல ஆண்டுகள் நினைந்து நினைந்து அழும் பாடல் என்று பிரித்துக் கொள்ளலாம். ஆனால் உயிர் இழப்புப் பாடல்களை அவை பாடப்படும் சூழல்களில் சேகரிக்க இயலாதாகையாலும் ஒரு காலத் தில் பாடிய பாடல் மற்ற காலங்களில் பாடப்படமாட்டது எனத் திட்டமாகக் கூறவியலாதாகையாலும் ஒரே பாடலே அனைத்துச் சூழல்களிலும் சிற்சில மாறுபாடுகளுடன் பாடப்படுகின்றதாகை யாலும் இவற்றைத் தனித்தனியே வகை பிரிப்பது இயலாமல் போகிறது. எனவே, இவற்றை உயிர் இழப்புப் பாடல்கள் என்ற ஒரே பிரிவில் வகைப்படுத்திக் கொள்ளலாம். பாடப்படும் சூழலி லேயே பாடலைப் பதிவு செய்யும் வாய்ப்பு ஏற்பட்டால் பாடலின் குறிப்புரையில் அதனைக் குறிப்பிடலாம். உயிர் இழப்புப் பாடல் கள் ஒப்பு, ஒப்பாரி, விண்ணாலம் என்ற சொற்களால் சுட்டப்படு கின்றன.

2.8.1.2. கலைஞர் பாடுவன

இறந்த வீடுகளில் பாடல் பாடி மாரடிப்பதற்கென்றே சில கலைஞர்கள் உள்ளனர். தமிழகத்தின் தென்பகுதிகளில் இப் பழக்கம் காணப்படுகின்றது[23] நாட்டின் எல்லாப் பகுதிகளிலும்

வழங்கும் ''கூலிக்கு மாரடிப்பவர்'' என்ற வழக்கு இத்தகைய கலைஞர்களையே சுட்டுகின்றது. இவர்களின் பாடல் ''மாரடிப் பாடல்'' என அழைக்கப்படுகிறது. மாரடித்துப் பாடாமல் மேளம் அடித்துக் கொண்டு ''கைலாசப் பாடல்'' பாடும் கலைஞர்களை யும் தமிழகத்தின் சில பகுதிகளில் காணலாம். இறந்தவர்களைக் ''கைலாசம்'' அனுப்புவதாகப் பாடல் அமையும். இவ்வகைப் பாடல்களும் உயிர் இழப்புப் பாடல்களே.

2.8.2. பிற இழப்புப் பாடல்கள்

நிலம், பணம் போன்ற பொருள் இழந்த நிலையிலும் மானத் துக்கு ஊறு நேர்ந்த நிலையிலும் குடும்பத்தின் அச்சாணி போன்ற வர்களுக்குச் செயலற்ற நிலை வந்துற்ற நிலையிலும் வாழ்க்கையில் தங்களுக்கு இருக்கும் குறைகளால் துயருற்ற நிலையிலும் பெண் களால் தனித்துப் பாடப்படும் பாடல்களைப் பிற இழப்புப் பாடல்களாகக் கருதலாம். இவை பாடல் வடிவத்தால் ஒப்பாரியை ஒத்திருக்கும். இவற்றைப் ''புலம்பல்'' என்றும் கூறலாம். புலம்ப லாவது (துன்பம் வந்துற்றபோது அதனை நினைந்து) தனித்து வருந்துதல். உயிர் இழப்பை நினைந்து தனித்து வருந்துதலும் புலம்பலே. ஆயினும் இங்கு அதனைத் தவிர்த்த ஏனையவற்றைக் கொள்ளலாம்.

3. புதிய வகைப்பாட்டின் பயன்கள்

சூழலை மட்டுமே அளவு கோலாகக் கொண்டுசெய்யப்பட்ட புதியவகைப்பாடு இதுவரை தமிழில் செய்யப்பட்ட வகைப்பாட்டி லிருந்து முற்றிலும் மாறுபடுகிறது. இப்புதிய வகைப்பாட்டினால் நாட்டுப்புறப் பாடல் ஆய்வு மேலும் சிறப்புற முடியும். புதிய வகைப்பாட்டினால் ஏற்படும் பயன்களைக் காணலாம்.

3.1. சூழலை அடிப்படையாகக் கொண்ட வகைப்பாடு தமிழகத்திற்கு மட்டுமல்லாது நாட்டுப்புறப் பாடல் தொகுப்புப் பணியின் தொடக்க நிலையிலுள்ள எல்லா நாடுகட்கும் பொருந் தும். பிற நாடுகளைப் பொறுத்தவரை பாடப்படும் பாடல்களின் மாறுபட்ட சூழ்நிலைகளுக்கேற்ப வகைப்படுத்தலில் சில மாறுபாடு கள் ஏற்படலாம். ஆனால் ''சூழல் வகைப்பாடு'' என்ற கோட்பாடு எல்லா நாடுகட்கும் பொருந்தும்.

3.2. கட்டுரையில் பிரிக்கப்பட்டுள்ள எட்டு பிரிவுகளிலும் அடக்கமுடியாத புதிய பாடல்கள் கிடைத்தாலும் அப்பாடல்கள் பாடப்படும் சூழலை அடிப்படையாகக் கொண்டு ஒன்பதாவதாய ஒரு பிரிவு பிரித்துக் கொள்வது எளிது.

3.3. இவ்வகைப்பாடு தொகுப்பாளரின் வேலையை எளிமைப்படுத்துகின்றது. பாடல் சேகரிக்கும்போதே அப்பாடல் எவ்வெச் சூழல்களில் பாடப்படுகிறது என்பதை நேரில் கண்டு கேட்டு உணர்வதோடு, பேட்டி முறையினாலும் தெளிவுபடுத்திக் குறித்துக் கொள்வதன் வாயிலாகப் பாடலை எளிதில் வகைப் படுத்திவிட முடியும்.

3.4. இவ்வகைப்பாடு ஆழ்கல்விக்கு அடிப்படையானது. பாடல் பாடப்படுவதன் நோக்கத்தையும் பாடலின் உண்மையான பொருளையும் புரிந்துகொள்ளத் துணை புரிகிறது.

3.5. அமைப்பியல் ஆய்வுக்கு இவ்வகைப்பாடு பெரிதும் துணை செய்கிறது. இதற்கு ஒரு சான்று காணலாம்.

''கும்மிப்பாடலுக்குத் திட்டமான உருவம் அமைந்துள்ளது''[24] என்றும், ''கும்மியாட்டத்திற்கென்று தனிவகைப் பாட்டுண்டு; அது கும்மியடி என்று தொடங்குவதோடு அத்தொடரையே ஒவ்வோர் உருவிலும் (சரணத்திலும்) மகுடமாகக்கொண்டிருக்கும்[25] என்றும் ''தன்னன னானன னானானே-தன,னானன னானன னானானே'' என்பதே கும்மிமெட்டு என்றும் கும்மிப் பாடல்களைப் பற்றித் தமிழறிஞர்கள் ஆய்வுரை வழங்குகின்றனர். புலவர் குழந்தை கும்மியை இயற்கும்மி, ஒயிற்கும்மி, ஓரடிக்கும்மி என்று பிரித்துக் கொண்டு அவற்றுக்கு இலக்கணமும் கூறுகின்றார்[26]. ஆனால் இக்கருத்துகள், வரையறைகள் அனைத்தும் நாட்டுப்புறப்பாடல் அமைப்பில் இலக்கியப் புலவர்களால் எழுதப்பட்டுள்ள இலக்கியக் கும்மிகளுக்கு மட்டுமே பொருந்துகின்றன. நாட்டுப்புற மக்களிடையே வழங்கும் கும்மிகளுக்கு இவை பொருந்தவில்லை. எனவே, கும்மிப் பாடலின் உண்மையான வடிவம் அல்லது வடிவங்கள் என்ன என்பதைக் கண்டறிய இவ்வகைப்பாடு துணை செய்யும். இவ்வகைப் பாட்டின்படிக் கும்மியடிக்கும் சூழல்களில் பாடப்பாடும் பாடல்கள் அனைத்தையும் கொண்டாட்டப் பாடல்களின் ஒரு உட்பிரிவாகிய கும்மிப் பாடல்கள் என்ற தலைப்பில் சேகரிக்கவேண்டும். அதன் பிறகு அப்பாடல்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்தால் கும்மிப் பாடல்களின் வடிவம்/ வடிவங்கள் என்னென்ன என்பதை உறுதி செய்யமுடியும்.

இவ்வாறு இப் புது வகைப்பாட்டினால் பல்வேறு நன்மைகள் ஏற்படுவதை உணரலாம்.

இதுவரை செய்யப்பட்ட தமிழ் நாட்டுப்புறப் பாடல்வகைகளின் அட்டவணை

உதிரியாகப் பெயர் சுட்டிய நிலை

மு. அருணாசலம்

1. ஏற்றப் பாட்டு
2. வள்ளைப் பாட்டு
3. கண்ணன் பாட்டு
4. நடவுப் பாட்டு
5. தாலாட்டுப் பாட்டு
6. ஒப்பாரிப் பாட்டு
7. பரிகாசப் பாட்டு
8. கும்மிப் பாட்டு
9. விடுகதைப் பாட்டு
10. ஏசற்பாட்டு
11. வேல் பாட்டு
12. இசைப்பாட்டு

பேரா. சாம்பமூர்த்தி

1. நீதிநெறிப் பாடல்கள்
2. தத்துவப் பாடல்கள்
3. பழமொழிப் பாடல்கள்
4. பண்டிகைப் பாடல்கள்
5. தொழில்வகைப் பாடல்கள்
6. வேளாண்மைப் பாடல்கள்
7. பிரார்த்தனைப் பாடல்கள்
8. மலைஜாதியினர் பாட்டு
9. புராணத் தொடர்பான பாடல்கள்
10. தாலாட்டுப் பாடல்கள்
11. கதைப்பாடல்
13. வெற்றிவீரர்களைப் பாராட்டிப்பாடும் பாடல்கள்
13. வண்டிக்காரன் பாடல்கள்
14. விடுகதைப் பாடல்கள்
15. நையாண்டிப் பாடல்கள்
16. விளையாட்டு சம்பந்தப் பட்ட பாடல்கள்
17. நோய் தீர்க்கும் மருந்து வகை சம்பந்தப்பட்ட பாடல்கள்
18. ஒப்பாரிப் பாடல்கள்
19. நகைச்சுவைப் பாடல்கள்

பல்வேறு அளவுகோல்களைக் கொண்டு வகைப்படுத்திய நிலை

கி. வா ஜகந்நாதன்-I

1. தொழில் செய்வார் பாடல்
2. இன்பப்பாடல்
3. உணர்ச்சிப் பாடல்
4. குழந்தைப் பாடல்
5. விளையாட்டுப் பாடல்
6. கருத்துப் பாடல்
7. கதைப்பாடல்

செ. வா. ஜகந்நாதன்-II

1. தெம்மாங்கு
2. தங்கரத்தினமே
3. ராசாத்தி
4. ஆண் பெண் தர்க்கம்
5. தொழிலாளர் பாட்டு
6. கள்ளன் பாட்டு
7. குடும்பம்
8. தாலாட்டு
9. சிறுவர் உலகம்
10. புலம்பல்
11. கும்மி
12. தெய்வம்
13. பலகதம்பம்

அன்னகாமு

1. கடவுள் துதி
2. மழை
3. நாட்டுச் சிறப்பு
4. பிறப்பு வளர்ப்பு
5. குழந்தைகளின் விளையாட்டு
6. திருமணம்
7. தொழில்
8. நவீனம்
9. களியாட்டங்கள்
10. கதைப் பாட்டுகள்
11. வாழ்க்கையில் சோதனைகள்
12. வேதாந்தப் பாடல்கள்
13. ஆதிவாசிகளின் பாடல்கள்
14. மங்களம்

ஆறு. அழகப்பன்

1. குழந்தைப் பாடல்கள்
2. பக்திப் பாடல்கள்
3. தொழிற் பாடல்கள்
4. கொண்டாட்டப் பாடல்கள்
5. உணர்ச்சிப் பாடல்கள்
6. பன்மலர்ப் பாடல்கள்

மா. கோதண்டராமன்

1. குழந்தைப் பாடல்கள்
2. காதல் பாடல்கள்
3. தொழிற் பாடல்கள்
4. ஒப்பாரிப் பாடல்கள்
5. தெய்வப் பாடல்கள்
6. பழமொழி விடுகதைப் பாடல்கள்
7. பன்மலர்ப் பாடல்கள் (கிராமியக்கலை, இயற்கைக் கதைப் பாடல்கள், துணுக்குகள், ஏசல், தத்துவம்)

மா. வரதராசன்

1. தாலாட்டுப் பாடல்கள்
2. குழந்தைப் பாடல்கள்
3. வேடிக்கைப் பாடல்கள்
4. கும்மி. ஒயிலாட்டப் பாடல்கள்

5. காதல் பாடல்கள்
6 விவசாயப் பாடல்கள்
7. தொழிற் பாடல்கள்
8. ஒப்பாரிப் பாடல்கள்
9. வேதாந்தப் பாடல்கள்
10. பல்சுவைப் பாடல்கள்

டாக்டர் சு. சண்முகசுந்தரம்

1. தாலாட்டு
2. ஒப்பாரி
3. சிறுவர் பாடல்கள்
4. நடனப் பாடல்கள்
5. தொழிற் பாடல்கள்
6. மணப்பாடல்கள்
7. நாடோடிப் பாடல்கள்

ஒரே அளவுகோலைக் கொண்டு வகைப்படுத்திய நிலை

நா. வானமாமலை-I

1. தெய்வங்கள்
2. மழையும் பஞ்சமும்
3. தாலாட்டு
4. விளையாட்டு
5. காதல்
6. திருமணம்
7. குடும்பம்
8. சமூகம்
9. உழவும் தொழிலும்
10. ஒப்பாரி

நா. வானமாமலை-II

1. குழந்தைப் பிறப்புத் தொடர்புப் பாடல்களும் தாலாட்டுப் பாடல்களும்
2 விளையாட்டுப் பாடல்களும் பிற குழந்தைப் பருவப் பாடல்களும்
3. காதல் பாடல்கள்
4. தொழிற் பாடல்கள்
5. சமுதாயச் சிக்கல் - குடும்ப வாழ்க்கைத் தொடர்புப் பாடல்கள்
6. ஒப்பாரி
7. வழிபாடு, கணியுரைத்தல் முதலிய பாடல்கள்


சு. கிருட்டிணசாமி


1. பக்தி
2. காதல்
3. மங்கல வாழ்த்து
4. தாலாட்டு
5. தொழில்
6. சமுதாயம்
7. ஒப்பாரி

சா. வளவன்

1. மழலை 2. இளமை 3. முதுமை

சூழலை அடிப்படையாகக் கொண்ட தமிழக நாட்டுப்புறப் பாடல் வகைகளின் விளக்கப் படங்கள்





2. குழந்தை வளர்ச்சிநிலைப் பாடல்கள்

- தவழல் பாடல்கள்
- உண்ணல்
- சாய்ந்தாடல்
- கைவீசல்
- கைதட்டல்
- அம்புலி
- நாப் பயிற்சி

3. விளையாட்டுப் பாடல்கள்

- உடற்பயிற்சி விளையாட்டு
  - சடுகுடுப் பாடல்
  - திம்பிப் பாடல்
  - கண்ணா மூச்சிப் பாடல்
  - வெயிலா நிழலா பாடல்
  - ஏழாங் காய்ப் பாடல்
  - கோலிப் பாடல் முதலியன
- வாய்மொழி விளையாட்டு
  - வேடிக்கைப் பாடல்
  - வினாவிடைப் பாடல் முதலியன

4. தொழிற் பாடல்கள்


- வேளாண்மைத் தொழில்கள்
  - ஏர்ப் பாடல்
  - ஏற்றப் பாடல்
  - நடவுப் பாடல்
  - களைவெட்டும் பாடல்
  - அறுவடைப் பாடல்
  - பொலி பாடல் முதலியன
- வேளாண்மையல்லாத் தொழில்கள்
  - நெல்குற்றும் பாடல்
  - சுண்ணாம்பு இடிக்கும் பாடல்
  - பாரஞ் சுமக்கும் பாடல்
  - வண்டியோட்டும் பாடல்
  - மீன்பிடிப்புப் பாடல் முதலியன

5. வழிபாட்டுப் பாடல்கள்

- பெருந்தெய்வ வழிபாடு
- சிறுதெய்வ வழிபாடு
  - பூசைப்பாடல்
  - விளக்குக் கேள்விப் பாடல்
  - நோன்புப்பாடல் முதலியன

6) கொண்டாட்டப் பாடல்கள்

- சிறப்பு
  - சமுதாயக் கொண்டாட்டம்
    - சமயத் தொடர் பானவை
      - இந்து துசமயம்
      - பிறசமயங் கள்
    - சமயத்தொடர்பற்றவை
      - பிரச்சார ஊர்வலப் பாடல்கள்
      - பிறந்தநாள் விழாஊர்வலப் பாடல்கள்
  - குடும்பக் கொண்டாட்டம்
    - காதணி விழாப் பாடல்
    - மஞ்சள் நீராட்டு விழாப் பாடல்
    - வளை காப்பு விழாப் பாடல்
- பொது


பொது மக்கள் நிகழ்ச்சிகள்
கலைஞர் நிகழ்ச்சிகள்
மண விழாப் பாடல்
கும்மிப் பாடல்
கோலாட்டப் பாடல்
கதைத் தொடர்பு நிகழ்ச்சிகள்
கதைத்தொடர் பில்லா நிகழ்ச்சிகள்
உறுமிமேளப் பாடல் முதலியன
நலங்குப் பாடல்
ஊஞ்சல் பாடல்
சம்பந்தப் பாடல்
கதைப் பாடல்
வில்லுப் பாடல்
தெருக்கூத்துப் பாடல்
தோல் பொம்மலாட்டப் பாடல்
கொலை சிந்து
கதைத் தொடர்புப் பாடல்
உதிரிப் பாடல்

7. இரத்தல் பாடல்கள்

- குடுகுடுப்பைப் பாடல்
- குறிசொல்லிப் பாடல்
- உண்டிபிலிகாரர் முதலிய பிச்சைக்காரர்

8. இழத்தல் பாடல்கள்

- உயிர் இழப்புப் பாடல்கள்
  - மகளிர்பாடுவன (ஒப்பாரி)
    - கணவனுக்கு
    - பிள்ளைக்கு
    - தாய்க்கு
    - தந்தைக்கு
    - உடன் பிறந்தார்க்கு
    - மாமனார்க்கு
    - மாமியார்க்கு
    - பிற உறவுகளுக்கு
  - கலைஞர் பாடுவன்
    - மாரடிப்பாடல்
    - கைலாசப் பாடல்
- பிற இழப்புப் பாடல்கள்
  - உரிமை முதலியனஇழப்புப் பாடல்
  - பொருள் இழப்பு
  - மான இழப்பு
  - உயிர் வாழும் நம்பிக்கை இழப்பு

அடிக்குறிப்புகள்

1. தே. லூர்து, நாட்டார் வழக்காற்றியல், ப-ம். 156
2. நன்னூல்—காண்டிகையுரை, நூ. 16
3. மு. அருணாசலம், காற்றிலே மிதந்த கவிதை, ப-ள். 3-4
4. ஆர். அய்யாசாமி, நாடோடிப் பாடல்கள், ப-ள். 7-8
5. கி. வா. ஜகந்நாதன், (பதிப்பாசிரியர்), மலையருவி, ப-ம் 12.
6. Studies in Tamil Folk Literature, P. 4
7. அன்னகாமு, ஏட்டில் எழுதாக் கவிதைகள்
8. ஆறு. அழகப்பன், நாட்டுப்புறப் பாடல்கள்-திறனாய்வு, ப-ள். 8-13
9. மா. கோதண்டராமன், நாட்டுப்புறப் பாடல்களின் வகைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன ஆய்வு மன்றத்தின் 11-வது கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பு (அச்சிடப்படாதது)
10. கவிஞர் மா. வரதராஜன், தமிழக நாட்டுப்பாடல்கள்
11. டாக்டர் சு. சண்முகசுந்தரம், ''நாட்டுப்புற இயல்-ஓர் அறிமுகம்'' (1975) என்ற நூலிலும், ''திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புறப் பாடல்களில் சமுதாய அமைப்பு'' (ஆக. 1977) என்ற தனது டாக்டர் பட்டத்திற்கான ஆய்வுரையிலும் (அச்சிடப்படாதது) நாட்டுப்புறப் பாடல்களை வகைப்படுத்தியுள்ளார். இங்கே அவர் எழுதி 'Literary Heritage of the Tamils' என்ற நூலில் வெளிவந்துள்ள "Folk Songs in Tamil'' என்ற கட்டுரையில் செய்யப்பட்ட வகைப்பாடு மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படுகிறது.
12. நா. வானமாமலை, (பதிப்பாசிரியர்), தமிழர் நாட்டுப் பாடல்கள். 'Studies in Tamil Folk Literature' என்ற நூலில் ஆசிரியர் பாடல்களை வகைப்படுத்தும்போது சிற்சில மாற்றங்களைச் செய்கிறார். ஆயினும் பொருண்மை வகைப்பாடு என்ற அடிப்படைக் கொள்கையில் மாற்றம் எதுவும் இல்லை (காண்க: அட்டவணை, நா. வா. II)
13. தமிழர் நாட்டுப் பாடல்கள், ப-ம். 153

14. ,, ப-ம். 456
15. ,, ப-ள். 379, 380
16. ,, ப-ம். 374
17. க. கிருட்டிணசாமி, கொங்கு நாட்டுப்புறப் பாடல்கள்.
18. சான்றாக வள்ளிக்கும்மியை எடுத்துக் கொள்ளலாம். இதன் ஒரு பாடத்தை ஆசிரியர் பக்தியிலும் (ப-ம். 21) மற்றொரு பாடத்தைத் தொழிலிலும் (ப-ம். 55) வைத்துள்ளார். இது பொருந்தாது.
19. சா. வளவன், ''செங்கற்பட்டு மாவட்டம்'', டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் (பதிப்பாசிரியர்), தமிழ்நாட்டுப் புற இயல் ஆய்வு, ப-ம். 192
20. இக்கட்டுரையாளரின் ''தமிழில் புதிர்கள்-ஓர் ஆய்வு'' (1978) என்ற நூலில் புதிர்கள் தெளிவாக வகைப்படுத்தப் பட்டுள்ளன.
21. இக்கட்டுரையாளர் சேகரித்த பாடல்களுள் ஒரு பாடல் மாரியம்மனை வழிபடுவதாக அமைந்திருந்தது. ஆயினும் அப்பாடல் ஏர் ஓட்டும் போது பாடுவதற்கேற்ப பல மாற்றங்களைப் பெற்றுள்ளதை அறிய முடிந்தது.
22. ஓய்வுக்கால இரவுகளில் தனிக்கலைஞரால் இசைக்கருவிகள் இன்றியும் கதைப் பாடல் நிகழ்ச்சி நடைபெறுவதுண்டு. இங்குப் பெரும்பான்மை கருதிக்கூறப்பட்டது.
23. திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இப்பழக்கம் காணப்படுதலாக டாக்டர் ஏ. என். பெருமாள் (இணைப் பேராசிரியர், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்) குறிப்பிட்டார்.
24. கி. வா. ஜகந்நாதன், மலையருவி, ப-ம். 24
25. ஞா. தேவநேயன், தமிழ்நாட்டு விளையாட்டுக்கள் ப-ம். 133
26. தொடையதிகாரம், ப-ள்.279-284

துணை நூற்பட்டி

அய்யாசாமி, ஆர்., (தொகுப்பாசிரியர்) குழந்தைகளுக்கு நாடோடிப் பாடல்கள், அருணோதயம், சென்னை, 1959.

அருணாசலம், மு., காற்றில் மிதந்த கவிதை, சக்தி காரியாலயம், மதுரை, 1943.

அழகப்பன், ஆறு., நாட்டுப்புறப் பாடல்கள் - திறனாய்வு, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்., சென்னை-1, 1973.

அன்னகாமு, ஏட்டில் எழுதாக் கவிதைகள், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், சென்னை-1, 1966,

இராமநாதன், ஆறு., தமிழில் புதிர்கள்-ஓர் ஆய்வு, சமுதாயச் சிற்பிகள் வெளியீட்டகம். மஞ்சக்கொல்லை-அஞ்சல், புவனகிரி-608601, தெ.ஆ மாவட்டம், 1978.

கிருஷ்ணசாமி, க., கொங்கு நாட்டுப்புறப் பாடல்கள், மக்கள் வெளியீடு, சென்னை-2, 1978.

குழந்தை, தொடையதிகாரம், பாரிநிலையம், சென்னை -1, 1967.

சண்முக சுந்தரம், சு , நாட்டுப்புற இயல்-ஓர் அறிமுகம், இலக்கிய மாணவர் வெளியீடு, சென்னை, 1975.

சுப்பிரமணியன், ச.வே., (பதிப்பாசிரியர்), தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-20, 1979.

தேவநேயன், ஞா., தமிழ்நாட்டு விளையாட்டுக்கள், தென்னிந்திய சைவசிந்தாத்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை-1, 1952.

பவணந்தி. நன்னூல் (காண்டிகையுரை), தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்., சென்னை 1, 1974.

லூர்து, தே., நாட்டார் வழக்காற்றியல் - ஓர் அறிமுகம், பெருமாள்புரம், திருநெல்வேலி, 1970.

வரதராஜன், மா., தமிழக நாட்டுப் பாடல்கள், வானதி பதிப்பகம் சென்னை-17, 1978.

வானமாமலை, நா , (பதிப்பாசிரியர்), தமிழர் நாட்டுப்பாடல்கள், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்-பிரைவேட் லிட், சென்னை, 1977.

ஜகந்நாதன், கி வா., (பதிப்பாசிரியர்), மலையருவி. தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு, 1975.

Subramanian, S.V., Gadigahcalam&(Editors), **Literary Heritage of the Tamils**, International Institute of Tamil Studies, Madras-20, 1981.

Vanamamalai, N., **Studies in Tamil Folk Literature**, N C B H P. LTD. ' Madras-2, 1969.